# பத்திரிக்கை செய்தி

## அரசு மானியம் பெற ரூ.12,000/- லஞ்சம் கேட்டு பெற்ற உதவி இயக்குநர்/மேலாளர் கைது

புகார்தாரர் திரு.சதிஷ்குமார், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) திட்டத்தின் கீழ் ரூ.5,00,000/- பெற இணையதளம் மூலம் மாவட்ட தொழில் மையம், நாகப்பட்டிணம் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். மாவட்ட தொழில் மையம், நாகப்பட்டிணம் மாவட்டம், புகார்தாரரின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து பரிந்துரை செய்து திட்டச்சேரி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையிலிருந்து ரூ.5,00,000/- பெற்றுள்ளார். இத்திட்டத்தின் கீழ் அரசால் வழங்கப்படும் மானியம் ரூ.1,25,000/-த்திற்காக உதவி இயக்குநர்/மேலாளர், மாவட்ட தொழில்மையம், நாகப்பட்டிணம் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பரிந்துரை செய்ய கேட்டிருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.அன்பழகன், உதவி இயக்குநர்/மேலாளர் மாவட்ட தொழில்மையம், நாகப்பட்டிணம் அவர்கள் தனக்கு ரூ.12,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை நாகப்பட்டிணம் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் 01.04.2025 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.அன்பழகன், உதவி இயக்குநர்/மேலாளர், மாவட்ட தொழில் மையம், நாகப்பட்டிணம் அவர்கள் லஞ்ச பணம் ரூ.12,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார். மேலும் திரு.அன்பழகனிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.1,01,000/- கைப்பற்றப்பட்டது.